அனுப்ப வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட் இன்னும் வந்து சேரவில்லை. வந்து சேர்ந்த பிறகு, இதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட நிரந்தர மான ஏற்பாடு செய்வதற்கு சிரமம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் காவலர்களுக்குச் சம்பளம் மற்ற வகையான படிகள் எல்லாம் கொடுக்கப் போதிய வசதி இல்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கு கேட் கலெக்ஷன், டெப்பாசிட் மூலமாக வருகிற வட்டி போன்றவை போதுமான அளவில் இல்லாத காரணத்தால் அப்படிப்பட்ட ஏற்பாடு களை உடனடியாகச் செய்ய முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ரிப்போர்ட்டு வந்த பிறகு இது குறித்துப் பரிசீலனை செய்யப்படும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இன்னொன்றையும் அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அங்கேயுள்ள கலைக்கூடத்தில் பல கலை நிகழ்ச்சிகள் நடக்கின்றன. பெரிய கூட்டங்கள் எல்லாம்கூட அதற்குள் நடக்கின்றன. அப்போது ஆயிரக்கணக்கான மக்கள் அந்தக் கலைக்கூடத்திற்குள் கூடுகிறார்கள். திறந்த வெளி அரங்கில் கூடுகிறவர் களில் யார் வேண்டுமானாலும், எந்தச் சிலையை வேண்டுமானாலும், எடுத்துப் போய்விடுகிற அபாயகரமான நிலைமை இருக்கிறது. எனவே இது குறித்தும் தக்க நடவடிக்கை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.வி. சுப்பையா : இது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யும் போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையும் கவனத்தில் கொள்ளப்படும்.

## *Lactone*

*20. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether it is a fact that a product by name "Lactone" is being produced experimentally by Madhavaram Dairy Project ; and

(*b*) if so, the details thereof ?

## லாக்டோன்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மாதவரம் பாற்பண்ணையில் சோதனை அடிப்படையில் ''லாக்டோன்'' என்னும் பெயருடைய பொருள் உற்பத்தி செய்யப் பட்டு வருவது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

[28th November 1970

(இ) வேர்க்கடலையினின்று பெறப்பட்ட புரதமும் முழுப்பாலும் சேர்த்து ''லாக்டோன்'' என்கிற ஒரு வகைப் பால் 1969-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் சென்னை மாநகரில் சோதனை முறையில் வழங்கப் பட்டது. இது மைசூரிலுள்ள மத்திய உணவுத் தொழில் நுணுக்க ஆய்வுக் கழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. மத்திய சிறைச்சாலைக் கைதிகளுக்கு ''லாக்டோன்'' வழங்கப்பட்டதுடன் அனைத்து நாடுகள் சுற்றுலாக் கண்காட்சியில் கால் லிட்டர் அளவுள்ள புட்டிகளில், நாள் தோறும் 60 முதல் 70 லிட்டர் வரை சுவையூட்டப்பெற்ற லாக்டோன் விற்கப்பட்டது. மாதவரம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியிலும் பாற் பண்ணையிலுள்ள பள்ளிகளிலும் இது வழங்கப்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : அதைத் தொடர்ந்து சென்னை மக்களுக்கு வழங்கும் உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : கிராக்கி போதிய அளவு இல்லாத காரணத்தால், அது இப்போது கைவிடப்பட்டுவிட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாதவரம் பால் பண்ணைக்கு யுனிசெஃப் (UNICEF) 11 கோடி ரூபாய் நிதி உதவி அளிப்பதாகப் பத்திரிகை யில் படித்தேன். அது சம்பந்தமாக நிலைமை எப்படியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

DEPUTY CHAIRMAN : Questions are over.

(NOTE :—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)

## II. ANNOUNCEMENT *Re Message from the Assembly*

DEPUTY CHAIRMAN : A message has been received from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1970 (L.A. Bill No.27 of 1970), as passed by the Legislative Assembly, and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

## III. CORRECTIONS TO STATEMENT MADE BY HON. MINISTER FOR FOOD AND LOCAL ADMINISTRATION

THE HON. THIRU P. U. SHANMUGHAM : During discussions in this House yesterday in connection with the consideration of the Tamil Nadu District Municipalities (Amendment) Bill, the Hon. the Leader of the Opposition enquired whether the ceiling limits of Rs. 15/- and Rs. 30/- mentioned in the new clause 26-A referred to old assessment or new assessment.